நீராக மாறிவிட்டது. அந்தப் பகுதியில் 10 மைல் சுற்றளவுக்கு உவர் நீராக மாறியதால் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் நலம் கருதி அருகில் இருக்கின்ற மாயனூர் தென்கரை கால்வாயி லிருந்து ஆழ்குழாய் அமைத்து இந்த ஊர்களுக்கு கூட்டுக் குடிநீர் வழங்க ஆவன செய்யப்படுமா என கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கிராமங்களில் ஏற்கனவே பகுதி அளவும், முழுமையாகவும் குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கிற காரணத் தால் தற்போது சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலிருக்கிற மக்களுக்கு குடிநீர் வசதி இருந்தும் அந்த நீர் உவர் நீராக இருப்பதால் தான் இந்தப் பகுதியில் இருக்கின்ற மாயனூர் தென்கரை கால்வாய்க்கு அருகில் ஆழ் குழாய் அமைத்து குடிநீர் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் அங்கே உப்பு நீராக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார் கள். அதுபற்றி தீவிரமான ஆய்வை மேற்கொள்ள அரசு பரிசீ லனைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 58, டாக்டர் க. கோபால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

58—

பாவட்டக்குடி ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிக்கு மேற்கூரை அமைத்தல்.

*15664: டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, பாவட்டக்குடி ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியில் மேற்கூரை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது முடிவடையும் ?

TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 28

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதி, பாவட்டக்குடி ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிக்கு மேற்கூரை அமைப்பதற்காக அரசு நடவடிக்கை எடுத்து இந்தப்பணி 10—3—1993 அன்றே முடிந்து இருக்கிறது.

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதி, பாவட்டக்குடி ஊராட்சி ஒன்றியம், பெரிய ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்று ஆகும். இந்த ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியில் பாவட்டக்குடியில் வாழ் கின்ற பெரும்பான்மையான முஸ்லீம் குழந்தைகளும் அடுத்தப் படியாக வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுடைய குழந்தைகளும் அங்கே கல்வி கற்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இந்தத் துவக்கப் பள்ளிக்குக் கட்டிடங்கள் இருந்த போதிலும் அதில் 3 கட்டிடங்கள் மேற்கூரை வேயப்படாமல் பழைய கட்டிடங்கள் ஆகும். அந்த கூரை வேயப்பட்டுள்ள கட்டிடங்கள் அனைத்தும் கூரைகள் எல்லாம் வீணாகி பாழடைந்த நிலையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோபால், நீங்கள் மேற்கூரை கேட்டீர்கள், மேற்கூரை அமைக்கப்பட்டு விட்டது என்று அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்.

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் ஆணையாளர் அலுவலகத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட அந்த மேற்கூரை சிறிய அளவான தொகை யில் கட்டி முடிக்கப்பட்டதால் ஒரு கட்டிடம் மட்டும் கட்டி முடிக்கப்பட்டு மற்ற 2 கூரை கட்டிடங்களுக்கு கூரை வேயப் படாமல் இருக்கிறது. அதேபோல், ஆர். சி. கட்டிடம் ஒன்று அங்கே இருந்தும் அது மழைக் காலங்களில் ஒழுகுகின்ற சூழ் நிலையில் இருககிறது. இந்த 3 கட்டிடங்களுக்கும் அதிகப்படியான நிதியை ஒதுக்கீடு செய்து இந்த மழைக் காலத்தில் கட்டிக் கொடுக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் ஒரு ஆய்வை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியைச் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 59, திரு. எம். பெரியவீரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.